

விருதுநகரில் சிவகாசியைச் சார்ந்த அ.தி.மு.க. மாவட்ட கவுன்சிலர்கள் விருதுநகர் வடக்கு, தெற்கு, மாவட்ட கழக செயலாளர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் –தங்கம் தென்னரசு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமை! இராமநாதபுரம் - பசும்பொன்னில்

# முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் - இரண்டு நிரந்தர மண்டபங்கள்!

## அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - கயல்விழி செல்வராஜ் அடிக்கல் நாட்டினர்!

இராமநாதபுரம், பிப். 27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன் கருதி ரூ.1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் இரண்டு நிரந்தர மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில் 16.02.2024 அன்று இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியம், பசும்பொன்னில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், முன்னிலையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, ஆகியோர் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

**இமானுவேல் சேகரன் திருவுருவச் சிலை!**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சந்தைதிடல் பகுதியில் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு, மற்றும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், செ.முருகேசன் (பரமக்குடி), இராம. கருமாணிக்கம் (திருவாடனை), மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர். ஆ. தமிழரசி ரவிக்குமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் இராஜா, பரமக்குடி சார் ஆட்சியர் அபிலாஷா கௌர், இ., பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் குருதிவேல்மாறன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ரவீந்திரன் அவர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் வி.வேலுச்சாமி, கமுதி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் தமிழ்ச் செல்விபோஸ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் சித்ரா தேவி அய்யனார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் வாசுதேவன், சசிகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சியில் (ஊமச்சிகுளம் அருகில்) ரூ.20 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்ட கிராமச்சாவடியை திறந்து வைத்தார். மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களையும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, ஒன்றியச் செயலாளர் சிறைச்செல்வன், மேற்கு யூனியன் சேர்மன் வீரராகவன், பகுதிச் செயலாளர் மருது பாண்டியன் மற்றும் அரசு அதிகாரிகள், ஊராட்சி தலைவர்கள் உள்ளனர்.

மதுரையில் கழக பொறியாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா

# பேச்சுப்போட்டி : அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பரிசுகள் வழங்கி சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., - சேடப்பட்டி மு.மணிமாறன் பங்கேற்பு!

மதுரை, பிப் 27-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக பொறியாளர் அணி சார்பாக பேச்சுப் போட்டி மற்றும் கலைஞர் கொண்டாட்டம் கலைத் திருவிழா மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு. மணிமாறன் பங்கேற்றார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில் மதுரையில் கழகப் பொறியாளர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மற்றும் நெல்லை மண்டல அளவிலான பொறியியல் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற பேச்சுப்போட்டி மற்றும் கலைஞர் கொண்டாட்டம் கலைத் திருவிழா இரண்டு நாட்கள் மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையேற்று தலைமையுரை நிகழ்த்தினார். பல்வேறு பகுதியிலிருந்து வந்த பொறியியல் கல்லூரி மாணவ - மாணவியர் போட்டியில் பங்கேற்றார்கள். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பரிசுகள் வழங்கி பாராட்டி சிறப்புரையாற்றினார். மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள், மதுரை நெல்லை மண்டல பொறுப்பாளர்கள் வே.உமாகாந்த், ச.பிரதீப் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

கழக மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்கே.பி.கருணா, பொறியாளர் அணி தலைவர் துரை.சி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேலும் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் இந் நிகழ்ச்சியில் பங்கேற்று அமைச்சர் பெருமக்கள் முதல் அனைத்து நிர்வாகிகள் வரை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்பு மிக்க செயலை போற்றும் வகையில் கலைஞர் அவர்களின் முகம் பதித்த மாஸ்க் அணிந்து எல்லோரையும் வியக்க வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பொறியாளர் அணி வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலை கார்த்திகேயன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் எம்.சுரேஷ், மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் வினோத் குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

விழாவில் மதுரை நெல்லை மண்டல பொறியாளர் அணி அமைப்பாளர்கள் என். செந்தில்குமரன், சு.கார்த்திகேயன், முத்துக்குமார், விஜய் பிரவீன், எஸ்.ஆர்.மதன் குமார், சாக்கேத்ராமன், முருகப்பன், பாஸ்கர பாண்டியன், அருணன், முருகப்பெருமாள், பசுபதி பாண்டியன், செல்வ குமார், அன்பழகன், ஆனந்த், ராதாகிருஷ்ணன், வீரவர்கீஷ், தகவல் தொழில் நுட்ப பணி மண்டல தலைவர் பாச.பிரபு, ஒன்றிய செயலாளர் தனபாலன், கிளைச் செயலாளர் பா.சந்திரன் மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# ‘இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்’ திண்ணைப் பிரச்சாரம்!

## ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

கன்னியாகுமரி, பிப். 27-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், ஒன்றிய, மாநகர, பகுதி செயலாள ர்கள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் BLA - 2களுக்கான “இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணைப் பிரச்சாரம் நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் 25.02.2024, ஞாயிறு அன்று மாலை 5.00 மணிக்கு ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து மாவட்டச் செயலாளர் -மேயர் ரெ. மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் திருமதி. விஜிலா சத்யானந்த் கலந்து கொண்டார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த், ஒன்றிய செயலாளர் சற்குருகண்ணன், பகுதி செயலாளர்கள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், மற்றும் BLA-2க்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுரையின்படி “இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” என்ற துண்டு பிரசுரம் வழியாக திராவிட மாடல் அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகள் மற்றும் 2024 தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை யின் சிறப்பம்சங்கள் பற்றியும் திண்ணைப் பிரச்சாரம் மூலம் பொது மக்களிடையே எடுத்துக் கூற வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 1ம் தேதி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் கிளை கழகங்களில் இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கியும், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், கழக சாதனைகளை பட்டி தொட்டி எங்கும் கொண்டு சென்றிடும் வகையில் தெருமுனை கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், திண்ணைப் பிரச்சாரங்கள் போன்ற நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் முழுவதும் நடத்திட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழக தலைவர் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய கழக நிர்வாகிகள் அயராது பாடுபட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

வசந்தம் ஜெயக்குமார் - சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.பி.எம்.மைதீன்கான் - ஹெலன் டேவிட்சன் - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

நெல்லை.பிப்.27

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 25.02.2024 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நெல்லை டவுண் குளப்பிறை தெருவில் நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றினார். மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநில மகளிர் அணிச் செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம்,

துணை மேயர் கே.ஆர். ராஜ், பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை (பாளை) மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்மீரான், ஒன்றிய செயலாளர் அருள்மணி, மாயா, இனியன், உள்பட பகுதி கழக நிர்வாகிகள், கழகப் பேச்சாளர்கள், மாவட்ட, மாநகர பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.




முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க “இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணை பிரச்சாரம் தொடக்க கருத்தரங்கம் நெல்லை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி திருமண மண்டபத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர், அம்பை தொகுதி பார்வையாளர் சிவராஜ் கருத்துரை வழங்கினார். ஆ.பிரபாகரன், கே.கே.சி. பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இசக்கிபாண்டியன் வரவேற்றார். மைக்கேல், தமயந்தி, ராமச்சந்திரன், அபுபக்கர், கணேசன், பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், வி.கே.புரம் கணேசன், முத்து கணேசன், சுப்பையா, மனிஷா செல்வராஜ், மணிகண்டன், வானுமாமலை, வி.கே.புரம் சுரேஷ் செல்வபெருமாள், அருண் தவசு பாண்டியன், பீர்முகமது, நெடுஞ்செழியன், பிரேம் ஆனந்த், பிரகாஷ் ஆகாஷ், ஜெயமாலதி, சுந்தர்ராஜன், முத்துராமலிங்கம், அண்ணாதுரை, கிங்ஸ்லி, அமானுல்லா, முத்துதுரை, அக்பர், ராமையா, கஸ்தூரி, மாயா சுரேஷ் உள்பட ஊரக, நகர்ப்புற, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.பி.சாமி

**பிப்ரவரி 27 (2020)**



பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.

திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.

2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**